4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 6 முதல் 10 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. மாவீரர் தீரன் சின்னமலைக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய தீரன் சின்னமலை அவர்களைத் தூக்கிலிட்ட இடமான என்னுடைய சங்ககிரி தொகுதியில், நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொங்கு நாட்டு மக்களுடைய நீண்ட கனவாக இருக்கிற, தீரன் சின்னமலைக்கு, சங்ககிரி பகுதியில் ஒரு நினைவுச் சின்னம்*

அமைக்க வேண்டும் என்ற உறுப்பினருடைய பல நாட்களாக உள்ள ஒரு கோரிக்கையை, மனித நேயத்தோடு, கொங்கு நாட்டிலே வாழுகிற மக்களுடைய உணர்வுகளைத் தெரிந்து, அறிவித்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கொங்கு நாட்டு மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களுடைய பாதங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிமை இந்தியாவில், ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, அமரரான தீரன் சின்னமலைக்கு சென்னை மாநகரிலே திருவுருவச் சிலையைக் கண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொங்கு மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, அவர் மறைவுற்ற சங்ககிரியில் நினைவுச் சின்னத்தை அமைக்க இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தி தமிழக மக்களிடையே மிகுந்த வரவேற்புக்குரியது.

இந்த மாமன்றத்தில், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கோரிக்கையை முன்வைத்தபோது, சட்டமன்றப் பதிவேடுகளிலே பதிவு செய்யப்படுகின்ற அனைத்து மக்கள் நலக் கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னுடைய உள்ளத்திலே பதிவு செய்து இருக்கிறார்; உள்ளத்திலே பதிவு செய்துகொள்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல நிலத்துக்கு அழகு, தூவப்படுகிற விதைகளை உள்வாங்கி அதை விருட்சங்களாக ஆக்கிக் காட்டுவதுதான். அதைப்போல, இந்தத் தாய் மண்ணின் தாயாக விளங்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிடம் வைக்கப்படுகிற கோரிக்கைகளை உள்வாங்கி, அதை நிறைவேற்றித் தருகிற, தலைசிறந்த ஜனநாயக மாண்பையுடைய ஜனநாயகவாதி என்கிற வகையிலே நான் அவரைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்வது மிக, மிக அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும். எப்படி சுதந்திரம் பெற்றோம் என்பதை மறந்து வருகின்ற சூழ்நிலை நம் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் நமது சுதந்திரத்திற்காகப் போராடியவர்களையெல்லாம் நினைவுகூர வேண்டும்.

இன்றைக்குப் பார்த்தீர்களேயானால், இளைஞர்கள் எல்லாம் 'புரட்சி வீரர்' என்று சே–கெவாரா படத்தையெல்லாம் தங்கள் சட்டையிலே அணிந்துகொண்டு செல்வதை நீங்கள் பார்க்கிறீர்கள். சில கட்சித் தலைவர்களும் சே–கெவாரா போன்று தங்களை வரைந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சே–கெவாரா அவர்கள், கியூபா நாட்டு ஃபிடல் காஸ்ட்ரோவுக்காகப் போராடி, ஒரு புரட்சி வீரராக அவர்கள் நாட்டில் திகழ்கிறார்கள். ஃபிடல் காஸ்ட்ரோ புரட்சி வீரராக அவர்கள் நாட்டில் திகழ்கிறார்கள்.

நமது நாட்டிலும், நமது நாட்டில் மட்டுமல்லாமல், குறிப்பாகத் தமிழகத்திலும் சுதந்திரத்திற்காகப் போராடி, உயிர் நீத்தவர்கள் இருக்கிறார்கள். கொடிகாத்த குமரன் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் இருக்கும்போது, தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது என்பது நாம் நமது தமிழகத்திலுள்ள சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களை மதிக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது, சுதந்திரத்திற்காகப் போராடியதை நினைவுகூர்ந்து, we should be patriotic என்பதை இளைஞர்களுக்கு அடிக்கடி நினைவூட்டும் வகையிலே அமையும். இதுபோன்ற செயல்களை நீங்கள் செய்யும்போது நமது இளைஞர்களும், நமது சுதந்திரத்தை எப்படிப் பெற்றோம், பெற்ற சுதந்திரத்தை எப்படிப் பேணிக் காக்க வேண்டும் என்பதை உணர்வார்கள். அந்த அடிப்படையிலே தீரன் சின்னமலை அவர்களுக்கு சங்ககிரி தொகுதியிலே நினைவுச் சின்னம் அமைப்பதை வாழ்த்தி, வரவேற்று, சமத்துவ மக்கள் கட்சி சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*__திரு. அ. சவுந்தரராசன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை வெள்ளையர்களை எதிர்த்து, தொடக்கக் காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய வீர மறவர்களிலே மிக முக்கியமானவர். வெள்ளையர்கள் பணத்தை எடுத்துச் செல்கிறபோது, அந்தப் பணத்தை அவர்களால் பத்திரமாக எடுத்துச் செல்ல முடியாமல், வழியிலே அவர்கள் அதை இழக்க நேரிட்டது. 'யார் இவன் குறுக்கே?' என்று வெள்ளையர்கள் கேட்டபோது, சின்னமலை சொன்னான், 'சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் இடையிலே ஒரு சின்னமலை. என்னைக் கடந்து நீ போக முடியாது' என்று சொன்னான். எப்பாடுபட்டாவது அவனைக் கொல்ல வேண்டும் என்பதற்காக கடும் முயற்சிகள் எடுத்து, இறுதியில் கைது செய்து, சங்ககிரி கோட்டையிலே தூக்கிலிட்டுக் கொன்றார்கள். குதிரையோடும், வாளோடும் பீரங்கியை எதிர்த்துப் போராடிய, நான் பிறந்த மாவட்டத்தினுடைய வீரன் என்ற அந்த எண்ணத்தோடு அந்த வீர மறவனுக்கு நினைவுச் சின்னத்தை சங்ககிரியிலேயே வைத்து, மீண்டும் ஒரு கௌரவத்தை அவனுக்குச் செலுத்தியிருக்கக்கூடிய, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டுகிறேன்; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்களில் தீரன் சின்னமலை அவர்களுடைய தியாகத்தைப் போற்றக்கூடிய முறையில், மதிக்கக்கூடிய முறையில், இதற்கு முன்னாலே பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும்கூட, இப்பொழுது தீரன் சின்னமலையினுடைய நினைவாக, அவருக்கு நினைவுச் சின்னம் சங்ககிரி தொகுதியில் ஏற்படுத்துவதற்கான முறையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில், சுதந்திரத்தைப் பற்றி நினைப்பது, சுதந்திரப் போராளிகளை மேன்மைப்படுத்துவது சிறந்தது

என்பதையும் சுதந்திர வரலாறு மேன்மைமிக்க ஒன்று என்பதையும் நான் இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், சிறப்பாக தீரன் சின்னமலை அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவது, சுதந்திரத்தை மதிப்பது, ஜனநாயகத்தை மதிப்பது என்று சொல்லி, வாழ்த்தி, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம் நாடு சுதந்திரம் பெற உழைத்திட்ட, தனது இன்னுயிரைத் துச்சம் என மதித்து, தன்னலமற்ற சேவை புரிந்த தியாகச் சீலர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் பெருமையைப் போற்றிடும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டமைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. வரவு—செலவுத் திட்டம், 2012—2013, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012—2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் பதிலுரையும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அன்புத் தோழர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்களுடைய நினைவைப் போற்றி என்னுடைய விவாதத்தை தொடங்குகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் சிலபல அறிவிப்புகள் குறித்து எனது கட்சியின் சக தோழர்கள் வரவேற்றும், மாற்றங்கள் கோரியும், ஏற்கெனவே பேசி இருக்கிறார்கள். அவற்றிற்குள் நான் அதிகம் போக விரும்பவில்லை. “பாராட்டுதல்களையும், ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் சமமாகவே எடுத்துக்கொள்வோம் என்பதை இங்கே உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று மாண்புமிகு நிதியமைச்சர் அறிக்கையில் கூறியுள்ளதை நான் பாராட்டுகிறேன். நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உள்ளது. சமூகப் படி நிலையில், மக்களிடையே பெரும் வருமான ஏற்றத்தாழ்வும் உள்ளது.